| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 22.07.2026 | |
| STC No.5/2024 | |
| சாட்சி :PW1(Recall) | |
| பெயர் : திருமதி. சத்யவாணி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. நடராஜன் | தொழில் : வீட்டுக்குடித்தனம் |
| கிராமம் : அழகாபுரி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 65/2026 |
| ( எதிரி ஆஜர் இல்லை, வழக்கறிஞர் ஆஜர்) | |

-----------------------------------------------------------

**மனுதாரர் மனு தாக்கல் செய்து மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் படிக்கவில்லை. நான் நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சொன்னதுபோலத்தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி கணேசன், தெய்வாணை மற்றும் அமுதா ஆகியோர்கள் எனது உறவினர்கள் என்றால் ஆமாம். எதிரி கணேசன் வீட்டிற்கும், எங்களுக்கும் இடப்பிரச்சனை சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வருவதால் பேசிக்கொள்ளமாட்டோம் என்றால் ஆமாம். நான் வளநாடு காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன் என்றால் ஆமாம். இந்த புகாரை யார் எழுதினார்கள் என்றால் நாங்கள் தான் எழுதியிருப்போம். புகாரை எந்ததேதியில் கொடுத்தோம் என்றால் எனக்கு ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் தேதி குறிப்பிடப்படவில்லை. அதுபற்றி எனக்குத்தெரியாது. எங்களது இடத்தை யாருக்கும் குத்தகைக்கு விட்டுள்ளோமா என்றால் குத்தகைக்கு விடவில்லை. மேற்படி புகாரில் எங்களது நிலத்தை குத்தகைக்கு விடவில்லை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி ராஜ்குமார் என்பவருக்கும், பிச்சைக்கண்ணு என்பவருக்கு தகராறு நடந்தது பற்றி எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. மேற்படி புகாரில் யார், யார் அடித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளோமா என்றால் சொல்லியுள்ளோம். மருத்துவமனையில் யார், யார் அடித்தார்கள் என்று

குறிப்பிட்டு சொல்லியுள்ளோமா என்றால் சொல்லியுள்ளோம். போலிசார் எங்களை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் வளநாடு காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். விசாரித்து கையெழுத்து வாங்கினார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புகாரில் கையெழுத்து வாங்கினார்களா என்றால் அதுபற்றி எனக்குத்தெரியாது, வாங்கவில்லை. போலிசார் என்னை மணப்பாறையில் வைத்து விசாரித்தார்கள். தேதி எனக்குத்தெரியாது. என்னை போலிசார் விசாரிக்கும்போது நானும், எனது கணவரும் இருந்தோம். எனது கணவரிடம் விசாரித்து போலிசார் கையெழுத்து வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். எதிரிகளுக்கும், எங்களுக்கும் உள்ள முன்விரோதத்தை பயன்படுத்தி எதிரிகளை பழிவாங்கும் எண்ணத்தில் ஒரு பொய்யான புகாரை கொடுத்தோம் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் என்னை மருத்துவர் எதுவும் விசாரிக்கவில்லை. அதேபோல் எனது கணவரை விசாரித்தார்களா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. எதிரிகளுக்கும், எங்களுக்கும் உள்ள முன்விரோதத்தை பயன்படுத்தி பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| |
|---|
| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai |
| Date: 22.07.2026 |
| STC No.5/2024 |
| சாட்சி :PW2(Recall) |

| | |
|---|---|
| பெயர் : திரு. நடராஜன் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. சின்னையா | தொழில் : விவசாயம் |
| கிராமம் : அழகாபுரி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 65/2026 |
| (எதிரி ஆஜர் இல்லை, வழக்கறிஞர் ஆஜர்) | |

---

**மனுதாரர் மனு தாக்கல் செய்து மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 9-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். புகாரை யார் எழுதினார்கள் என்றால் போலிசார் எழுதினார்கள். புகாரை எழுதிய போலிசார் எந்த பதவிநிலையில் இருந்தார் என்றால் அதுபற்றி எனக்குத்தெரியாது. போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். அதன்பின்னிட்டு வளநாடு காவல்நிலையத்திற்கு வரவழைத்து விசாரித்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். எந்த தேதியில் வைத்து என்னிடம் போலிசார் விசாரித்தார்கள் என்றால் எந்ததேதி, எந்த மாதம் என்று எனக்குத்தெரியவில்லை. எதிரி கணேசன் குடும்பத்திற்கும், எங்களுக்கும் இடப்பிரச்சனை சம்மந்தமாக முன்விரோதம் உள்ளது என்றால் சரிதான். பேசிக்கொள்ளமாட்டோம் என்றால் சரிதான். எனது வீட்டைச்சுற்றி சுமார் 10, 20 வீடுகள் இருக்கும் என்றால் சரிதான். நான் மருத்துவனையில் இருந்தபோது மருத்துவர் என்னை விசாரித்தாரா என்றால் என்னை விசாரிக்கவில்லை. எனது மனைவி மருத்துவமனையில் சேர்க்கும்போது நல்ல சுயநினைவுடன் இருந்தாரா என்றால் மருத்துவமனையில் சேர்க்கும்போது சுயநினைவுடன் இல்லை. அதன்பின்னிட்டு சுயநினைவுடன் இருந்தார். காலை 06.00 மணிக்கு மருத்துவமனையில் சேர்த்தேன். சம்பவம் இரவு 11.00 மணிக்கு நடந்தது. சரியான

நல்ல இருட்டு நேரம் என்றால் சரிதான். என்னை போலிசார் எங்கு வைத்து விசாரித்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. என்னை போலிசார் விசாரித்து கையெழுத்து வாங்கினார்களா என்றால் ஞாபகமில்லை. ஆதிலெட்சுமி, ரேணுகா எனது மருமகள்கள் என்றால் சரிதான். ஆனந்த், மணிவேல் எனது உறவினர்களா என்றால் ஆமாம். எனக்கும், எதிரிக்கும் உள்ள இடப்பிரச்சனை சம்மந்தமாக முன்விரோதத்தை பயன்படுத்தி எதிரிகளுக்கு எதிராக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.